# ஓ.எம்.ஆரில் கவனமாக செல்ல வாகன ஓட்டிகளுக்கு அறிவுறுத்தல்

**சென்னை, செப். 25–**

ஓ.எம்.ஆரில், மெட்ரோ ரயில் பணிக்கான மண் பரிசோதனை பணி நடைபெறுவதால், வாகன ஓட்டிகள் கவனமாக செல்ல வேண்டும் என, போக்குவரத்து போலீசார் வலியுறுத்தினர்.

சென்னை மெட்ரோ ரயில், 2வது திட்ட பணிக்காக, 85 ஆயிரம் கோடி ரூபாயில், மூன்று வழித்தடங்களில், 107.55 கி.மீ., துாரத்தில் பாதை அமைக்கப்படுகிறது.



ஓ.எம்.ஆரில், மண் பரிசோதனை நடைபெறும் பணி.

### மண் பரிசோதனை

மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 45.81 கி.மீ., துாரத்தில் ஒரு பாதையும்; மாதவரம் – சோழிங்கநல்லுார் இடையே, 44.62 கி.மீ.,யில் இரண்டாவது பாதையும்; கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 17.12 கி.மீ.,யில் மூன்றாவது பாதையும் அமைக்கப்படுகிறது.

இந்த பாதையில், 116 நிலையங்கள் கட்டப்பட உள்ளன. இத்திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி, வேகமாக நடைபெற்று வருகிறது.

மாதவரம் – சிறுசேரி சிப்காட் பாதைக்கு, ஓ.எம்.ஆரில், மத்திய கைலாஷ் முதல் எஸ்.ஆர்.பி., – டூல்ஸ் வரையும், எஸ்.ஆர்.பி., – டூல்ஸ் முதல் சோழிங்கநல்லுார் வரையும் இரண்டு பிரிவாக, மண் பரிசோதனை நடைபெற்று வருகிறது.

ரயில் நிலையம் அமையும் இடத்தில், சாலையோரத்தில், 21 அடி ஆழத்திற்கு மண் எடுத்து, பரிசோதனை செய்யும் பணி இறுதி கட்டத்தில் உள்ளது.

### இரும்பு தடுப்பு

தற்போது, துாண்கள் அமையும் இடமான சாலை மையப்பகுதியில் மண் பரிசோதனை செய்யப்படுகிறது.

இதற்காக, மையப் பகுதியிலிருந்து சாலையின் இரண்டு பக்கத்திலும், 15 அடி வீதம் ஒதுக்கி, இரும்பு தடுப்புகள் அமைக்கப்பட்டு உள்ளன.

இதனால், பணி நடைபெறும் பகுதிகளில், வாகன ஓட்டிகள் கவனமாக செல்ல வேண்டியது மிகவும் அவசியம்.

சில நாட்களாக முன், இருசக்கர வாகனத்தில் கவனக்குறைவாக சென்ற வாலிபர், மண் பரிசோதனை பணிக்காக நிறுத்தியிருந்த, 'போர்வெல்' லாரி மீது மோதி காயம் அடைந்தார்.

இதனால், ஓ.எம்.ஆரில் செல்லும் வாகன ஓட்டிகள், வேகத்தை குறைத்து, கவனமாக செல்ல வேண்டும் என, போக்குவரத்து போலீசார் வலியுறுத்தி உள்ளனர்.

இது குறித்து, அடையாறு போக்குவரத்து உதவி ஆணையர் சந்திரசேகரன் கூறியதாவது:

மத்திய கைலாஷில் இருந்து சிறுசேரி வரை, மெட்ரோ ரயில் பணிக்காக மண் பரிசோதனை நடக்கிறது. இந்த பணி, குறைந்தது, மூன்று மாதங்கள் நடக்க வாய்ப்புள்ளது.

### எச்சரிக்கை

பணி நடைபெறும் இடத்தில், வாகன ஓட்டிகள் வேகத்தை குறைத்து செல்ல வேண்டும்.

குறிப்பாக, வளைவு பகுதியில் பணி நடந்தால், சாலை தடுப்பு இருப்பது எளிதில் தெரியாது என்பதால், வாகன ஓட்டிகளுக்கு எச்சரிக்கை செய்யும் விதமாக, தடுப்பு அமைக்க மெட்ரோ நிர்வாகத்திற்கு வலியுறுத்தப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.